DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 02** |
| **Name** | **:** | **திரு. முருகேசன்** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>13.08.2024</u>**

A1, A2, A3 Present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஜெ.கொலக்கம்பையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 என் தந்தை இறந்துபோன நபர் என் உடன்பிறந்த தம்பி. சாட்சிகள் துளசி என் அம்மா, கீதா இறந்துபோன பழனிச்சாமியின் மகள், சாட்சி தனலட்சுமியை தெரியும். நாங்கள முத்தரையர் வகுப்பை சேர்ந்தவர்கள். என் தம்பி மனைவி சித்ரா ஆதி கர்நாடகா வகுப்பை சேர்ந்தவர். என் தம்பிக்கும் அவருடைய மனைவிக்கும் இடையே நடந்தது காதல் திருமணம். திருமணத்தை என் தம்பியும் அவருடைய மனைவியும்

தானாக செய்துகொண்டு, பின்பு நாங்கள் அந்த திருமணத்தை ஏற்றுக்கொண்டோம். என் தம்பிக்கு ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். பெண் குழந்தையின் பெயர் கீதா. ஆண் குழந்தையின் பெயர் லோகநாதன். ஆண்குழந்தை சித்ரா வசமும், பெண் குழந்தை என் தகப்பனார் வசமும் தற்போது உள்ளனர். பெண் குழந்தை கீதா தற்போது பத்தாம் வகுப்பு படிக்கிறார். நாங்கள் ஒரு இறப்புக்கு கொல்லேகால் போயிருந்தோம். அது சித்ராவின் பாட்டி இறப்பு. அந்த இறப்புக்குப் போய்விட்டு நாங்கள் அனைவரும் திரும்பிவிட்டோம். சித்ராவைக் கூப்பிட்டபோது அவர் அப்போது வர மறுத்துவிட்டார்.

சித்ராவின் அம்மா மற்றும் எதிரி மகாதேவன் ஆகியோர் சித்ராவை அனுப்ப மறுத்துவிட்டார்கள். 16.09.2019–ம் தேதி அன்று சித்ராவை அவருடைய அப்பா கூட்டி வந்தார். ஆனால் என் தம்பி நான் கூப்பிடும்போது நீ வரவில்லை, அதனால் உன்னை வீட்டில் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். பின்பு நான் சமாதானம் செய்து சித்ராவை என்னுடைய வீட்டுக்கு கூட்டி சென்றுவிட்டேன். தினமும் நாங்கள் கேரட் எடுக்கும் வேலைக்கு இரவு செல்வோம். காலை 10:00 மணிக்குத்தான் திரும்புவோம். 17.09.2019–ம் தேதி நாங்கள் வேலைக்கு போய்விட்டு வந்து தூங்கி விட்டோம். அந்த சமயத்தில் மகாதேவன் அங்கு வந்து சித்ராவிடம், உன்னை வீட்டில் அனுமதிக்காததால் நீ ஊருக்கே போய்விடு என்று சொன்னார். சித்ரா என்னிடத்தில்

மகாதேவன் தன்னை ஊருக்கு போகுமாறு சொன்னதாகச் சொன்னார். நான் அவரிடம் சமாதானம் செய்து, சிறிதுநேரம் தூங்கிவிட்டு, அங்கு தோட்டத்தில் வேலை இருக்கிறது போய்பார்க்கலாம் என்று சொன்னேன். மாலை 4:00 மணி இருக்கும் எதிரிகள் சித்ராவை என்னிடம் சொல்லாமல் கூட்டிச் சென்றுவிட்டார்கள். எதிரிகள் சித்ராவை அவர்கள் காரில் கூட்டிச்சென்று சென்று பஸ் ஏற்றிவிட்டார்கள். சுமார் 4.00, 4.30 மணிக்கு என் தம்பி எனக்கு போன் செய்து, தன்னை எதிரிகள் மூவரும் அடித்துவிட்டதாகவும், நீ கீழே வா என்று என்னிடத்தில் போனில் சொன்னார்.

நான் போய் விநாயகர் கோவில் அருகில் பார்க்கும்பொழுது, என் தம்பியின் காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்துகொண்டிருந்தது. நான் என் தம்பியை கூட்டிச் செல்ல முற்பட்டேன். அவர் தன்னுடைய நெஞ்சை பிடித்துக் கொண்டு நெஞ்சு வலிக்கிறது என்று சொன்னார். அவர் மேலும் தன்னுடைய மகனையும், மகளையும் பள்ளியில் சென்று பார்த்துவிட்டு, மருத்துவமனைக்கு செல்லலாம் என்று சொன்னார். அவர் தன்னுடைய குழந்தைகள் வந்தவுடன் அவர்களிடம் தன்னை எதிரிகள் மூவரும் அடித்துவிட்டதாகவும். நான் உயிரோடு இருக்க மாட்டேன் என்றும், தங்களுக்கு என்னால் இனிமேல் எதுவும் செய்ய இயலாது என்றும், தான் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் உங்க பெரியப்பா செய்வார் என்றும்

குழந்தைகளிடம் சொன்னார். பின்பு அவர் காட்டை நோக்கி நடந்து போனார். நான் வீட்டுக்கு துணிமாற்ற சென்றேன். எங்களுடைய தோட்டம் சுமார் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும். நான் வந்து பார்க்கும்போது என் தம்பியை மனோகரன் மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதாக சொன்னார்கள். நான் பின்னாலேயே பைக்கை எடுத்துக்கொண்டு ஊட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, என் தம்பியின் உடல் வெளியே இருந்தது. அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். மனோகரன் மற்றும் மனோகரன் மகன் ஆகியோர் சேர்ந்து என் தம்பி விஷம் அருந்திவிட்டதாக சொல்லி மருத்துவமனையில் சேர்க்க முயற்சி செய்திருக்கிறார்கள். நான் மனோகரிடம் எதிரிகள் அடித்ததால்தான் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னதற்கு மனோகரன் என்னிடத்தில் அவர் விஷம் அருந்திவிட்டார் என்றும், தோட்டத்திலிருந்து தான் நாங்கள் தூக்கி வந்ததாகவும் என்னிடத்தில் சொன்னார்கள்.

நான் மருத்துவமனைக்கு செல்லும்போது பைக்கில் உட்கார்ந்து கொண்டு, என் தம்பிக்கு ஏதாவது நடந்தால் உங்களை சும்மா விடமாட்டேன் என்று மகாதேவனை பார்த்து சொன்னதற்கு, என்னை எதுவும் செய்ய இயலாது என்று என்னிடத்தில் சொன்னார். மருத்துவமனையில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். சவக்கிடங்கிற்கு உடலை கொண்டு சென்றார்கள். போலீசார் என் தம்பியின் உடலை இரசாயன

பரிசோதனைக்கு அனுப்பி, என் தம்பின் உடலில் விஷம் இல்லை என்று தெரியவந்தவுடன் எதிரிகள் அடித்ததால்தான் அவர் இறந்திருக்கிறார் என்ற விவரம் தெரிய வந்ததால், என்னிடம் மறுபடியும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். மேலும், நான் குன்னூர் நீதிமன்றத்தில் சென்று நீதித்துறை நடுவர் முன்பு நடந்த விவரங்களைச் சொன்னேன். அந்த வாக்குமூலத்தில் உள்ள கூலி வேலை செய்து வருகிறேன் என்ற பகுதியிலிருந்து என் தம்பி இரண்டு பேர் இறந்து விட்டதாக கூறினார்கள் என்ற பகுதி வரைக்கும் அசாஆ.3 ஆகும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும், என் அப்பா அம்மாவும் தனித்தனியே வசித்து வருகிறோம். நான் புகார் கொடுப்பதற்கு காவல் நிலையம் செல்லவில்லை. நான் 10 மணிவாக்கில் காவல் நிலையம் சென்றேன். அப்போது என் அப்பா அங்குதான் இருந்தார். எதிரிகள் அனைவரும் அங்குதான் இருந்தார்கள் அவர்களை வெளியே உட்காரவைத்திருந்தார்கள். நான் 10 மணிக்கு சென்றபோது, எனக்கு தெரிந்த வழக்கு விவரங்களை போலீசார் விசாரித்தார்கள்.

நான் பிரேத விசாரணையின்போது உடனிருந்தேனா என்றால் இல்லை. பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் என்னுடைய குவிமுச 161–ன் கீழான வாக்குமூலத்தில் 18.09.2019 உதகை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து எனது தம்பி பழனிச்சாமி

பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையிலும், பஞ்சாயத்தார் முன்னிலையிலும் காலை 10:45 மணி – 12.45 மணிவரை பிரேத விசாரணை செய்தபோது, எனது தம்பி இறப்பு குறித்து அபிப்பிராயம் தெரிவித்து பஞ்சாயத்தார் நமூனாவில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் நியாபகமில்லை. ஆனால் அவ்வாறு தான் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்த பிறகு மறுபடியும் விசாரிக்கவில்லை. என்னை போலீசார் 4, 5 முறை விசாரித்தார்கள். போலீஸ் நிலையத்துக்கு போன் செய்து அன்றைய தினமே தகவல் சொல்லிவிட்டார்.

மருத்துவமனையில் உள்ள புறக்காவல் நிலையத்திலிருந்து தகவல் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அங்கேயே எழுதிவைத்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் சாவுக்கு போய்விட்டு அனைவரும் ஜெ.கொலக்கம்பை வந்தோம். அப்போது என் தம்பியின் மனைவி உடன் வரவில்லை. பின்பு அடுத்தநாள் என் தம்பி மனைவி வந்தபோது, அவரை என் தம்பி வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை என்றால் அவர் வீட்டுக்குள் வரக்கூடாது என்று சொல்லவில்லை. அங்கு தானே இருந்தாய், அங்கேயே இருந்துகொள் என்று சொன்னார். அப்பொழுது என் தம்பி குடிபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையின்போது, என் தம்பி மனைவி சித்ரா அடுத்த நாள் 16.09.2019 –ம் தேதி திங்கள்கிழமை வந்தார்

என்றும், அப்போது குடிபோதையில் இருந்த என் தம்பி பழனிச்சாமி, சித்ராவிடம் நேற்று நான் கூப்பிட்டபோது நீ ஏன் ஊருக்கு வரவில்லை, இப்ப மட்டும் ஏன் வந்த என்று பேசி வாய்தகராறு செய்து நீ வீட்டுக்குள் வரக்கூடாது என்று சொல்லிவிட்டு, வீட்டுக்குள் சென்றுவிட்டார் என்றால் இல்லை. ஆனால் அந்த வாக்குமூலத்தில் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. நான் சித்ராவை சமாதானம் செய்து, என்னுடைய வீட்டிற்கு கூட்டிச் சென்றேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

என்னை போலீசார் 22.01.2020 அன்று விசாரிக்கும்போது, அப்போது பழனிச்சாமி விஷம் குடித்துவிட்டு இறந்துவிட்டார் என்று மருத்துவரிடம் சொன்னதாக நான் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். மனோகரன் சொல்லித்தான் அவ்வாறு சொல்லி உள்ளார். மனோகரன் சொல்லித்தான் என் அப்பா, என் தம்பி விஷம் குடித்து இறந்ததாக சொன்னார் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் மனோகரன் சொல்லித்தான் என் தம்பி. விஷம் அருந்தி இறந்துவிட்டதாக சொன்னார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் 17.09.2019 வேலைக்கு போய்விட்டு, நான் வீட்டில் வந்து தூங்கிவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீதித்துறை நடுவர்

விசாரிக்கும்போது நான். 17.09.2019 –ம் தேதி வேலைக்கு போய்விட்டு வீட்டில் வந்து தூங்கிவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சித்ராவிடம், மகாதேவன் என் தம்பி அவரை வீட்டுக்குள் அனுமதிக்காததால் ஊருக்கு போய்விடு என்று சொன்னார் என்ற விவரத்தை முதல் விசாரணையிலோ, போலீசார் விசாரணையிலோ அல்லது நீதித்துறை நடுவரிடமோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சித்ராவை சமாதானம் செய்து தோட்டத்தில் வேலை இருப்பதால் தோட்டவேலைக்கு சென்று விட்டேன் என்று போலீசார் விசாரணையிலோ, நீதித்துறை நடுவர் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஆனால் அவர்கள் எழுதவில்லை. 4 மணிக்கு எதிரிகள் சித்ராவை கூப்பிட்டு சென்றுவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் தம்பி 4.00, 4.30 மணிக்கு போன் செய்து என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும், நீதித்துறை நடுவரிடம் கொடுத்த இரண்டு வாக்குமூலத்திலும் அவ்வாறு இல்லையென்றால் சரிதான். நான் போய் பார்க்கும்பொழுது என் தம்பிக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. எந்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தம்பி மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு தன் குழந்தைகளை பார்த்துவிட்டு அவரிடம் பேசிவிட்டு, தான்

மருத்துவமனைக்கு போகவேண்டும் என்று சொன்னதாகச் சொல்லும் விவரத்தை இதற்கு முன்பு எந்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி தன்னுடைய குழந்தைகளிடம் உங்களுடைய பெரியப்பா தான் எனக்கு பதிலாக இருந்து உங்களை பார்த்துக்கொள்வார் என்று என் தம்பி சொன்னதாக போலீஸார் விசாரணையிலோ, நீதித்துறை நடுவர் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் மனோகரிடம், என் தம்பி விஷமருந்தி இறந்துவிட்டதாக பொய்யான தகவல் கொடுத்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 17.09.2019–ம் தேதி என் தம்பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, மருத்துமனைக்கு செல்லும்போது பைக்கில் அமர்ந்து எதிரியை பார்த்து என் தம்பிக்கு ஏதேனும் ஆகினால் உன்னை சும்மாவிடமாட்டேன் என்று சொன்னதாகவும், அதற்கு அவர், என்னை எதுவும் செய்ய இயலாது என்று சொன்னதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கொல்லேகால் இறப்புக்கு போவதற்கு முன்பு நான், என் தம்பி, தம்பி மனைவி, கணேசன் மற்றும் என் அம்மா ஆகியோர் சிறுமுகைக்கு போனதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு போனோம். என் தம்பியை அப்பொழுது அந்த ஊர்க்காரர்கள் அடித்து விட்டார் என்றும் நான் தான் போய்

அவரை காப்பாற்றி கூட்டி வந்தேன் என்றால் சரியல்ல. என் தம்பி சிறுமுகையில் ஒரு திருமணமான பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டார் என்று அங்கு உள்ள ஊர்க்காரர்கள் என் தம்பியை கட்டி வைத்துவிட்டார் என்றும் நான் போய் சமாதானம் செய்து கூட்டி வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. சிறுமுகையில் இருந்து நாங்கள் தான் போய் அவரை கூட்டி வந்தோம் என்றால் சரிதான்.

சடலக்கூறாய்வு அறிக்கையில் பின்னிட்டு என் தம்பி காயங்களால் இறந்ததாக அறியவந்ததால், பின்னர் விசாரணை செய்து எதிரிகள் அடித்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சித்ரா என் தம்பி இறந்த பிறகு, அவருடைய தாயார் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் ஆம், பதினாறாம் நாள் காரியம் முடிந்த பிறகு எதிரிகள் தான் அவரை அனுப்பிவிட்டார்கள்.

எதிரிகள் என் தம்பியை அடித்திருந்தால் 18.09.2019–ம் தேதியிட்ட வாக்குமூலத்திலேயே அவர்கள் அடித்ததாக வாக்குமூலம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 18.09.2019–ம் தேதி என் தம்பியை அடித்ததாக எந்த தகவலும் எனக்கு இல்லை என்றாலும், அதனால்தான் நான் அவ்வாறு வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

22.01.2020–ஆம் தேதி உள்ள வாக்குமூலத்தில் எதிரிகள் அடித்ததாக சொல்லியுள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பு மறுகுறுக்கு விசாரணை</u>**

மேற்படி வாக்குமூலம் போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

A ABDUL KADHAR

Digitally signed by A ABDUL KADHAR
Date: 2024.08.13 15:33:05 +0530